சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம், திருச்சியில் திட்ட உருவாக்க வட்ட அலுவலகக் கட்டிடம் மேம்படுத்தும்பணி ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் கட்டுதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி(என்.2)த் துறை

அரசாணை (நிலை) எண். 152 நாள் 5.8.2009

படிக்க:

தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), அவர்களின் கடித எண்.எப்/9000/2008, நாள். 20.1.2009.

---

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் நீர்வள ஆதாரத் துறையின் தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள், திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம், திருச்சியில் திட்ட உருவாக்க வட்ட அலுவலகக் கட்டிடம் மேம்படுத்தும்பணி ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. இப்பணிக்கான விவரம் பின்வருமாறு:-

திருச்சி மாவட்டம், திருச்சி திட்ட உருவாக்க வட்ட அலவலகம், திருச்சியில் உள்ள கட்டிடம், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தின் பொது கட்டிட பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் திட்ட உருவாக்க வட்ட அலுவலகக் கட்டிடம் 1926ஆம் ஆண்டு கட்டுப்பட்டுள்ளது என்றும் இந்த கட்டிடம் கட்டப்படும் போது காரை கூரையுடனும் ஒட்டு கூரையுடனும் செங்கல்லும் சுண்ணாம்பு காரையும் கொண்டு 0.45 மீ கனமுள்ள சுவர்களும் கொண்டு கட்டப்பட்டது, என்றும் 1974இல் இந்த கட்டிடம் அரசால் வாங்கப்பட்டு அதன் பின்பு பெரிய மராமத்து வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை மற்றும் கடந்த 15 ஆண்டுகளாக மராமத்து பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சுவர்கள் தரைமட்டத்திலிருந்து 1.5மீ வரை மழைகாலங்களில் ஈரம் அதிகமாகி சுவர் காரைகள் பழுதடைந்துள்ளன, என்றும் மேலும், கூரையின் மேல் மழைநீர் புகா வண்ணம் பதிக்கப்பட்ட ஓடுகளும் பழுதடைந்து அவைகள் இணைக்கப்பட்ட சிமெண்ட காரைகளும் பெயர்ந்து மழைநீர் கூரையினால் உறிஞ்சப்பட்டு மழைக்காலம் முழுவதும் கூறை ஈரத்தன்மையுடனேயே காணப்படுகிறது. தரையில் பதிக்கப்பட்ட தட்டு ஓடுகளும் முழுவதுமாக பழுதடைந்துள்ளது என்றும் மேற்படி கட்டிடத்தை மேம்படுத்த மராமத்து வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது என்றும் இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை 2009–2010ஆம் ஆண்டில் ரூ.9.00 இலட்சமாகும் என்றும் இத்திட்டம் திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர் அவர்களால் செயலாக்கப்படும் என்றும் இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது எனவும் கூறியுள்ளார்.

3. திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம், திருச்சியில் திட்ட உருவாக்க வட்ட அலவலகக் கட்டிடம் மேம்படுத்தும்பணி ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிலை நிதிக்குழு ஏற்பளித்துள்ள நிலையில் திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம், திருச்சியில் திட்ட உருவாக்க வட்ட அலுவலகக் கட்டிடம் மேம்படுத்தும்பணியை ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

“4701– பெரிய, நடுத்தர பாசன திட்டங்கள் குறித்த மூலதன செலவு –03 நடுத்தர பாசனம் – வணிகத் தன்மை வாய்ந்தது – 380 பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு அலுவலகக் கட்டிடம் கட்டுதல், புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்-II மாநில திட்டம் JT திருச்சியில் உள்ள திட்ட உருவாக்க வட்ட அலுவலக கட்டிடத்தை மேம்படுத்தும் பணி 16 பெரும் பணிகள் (து.தொ.கு 4701 03 380 JT 1607).

5. தலைமைப்பொறியாளர், திருச்சி மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்தி, திட்டப்பணி முன்னேற்றம் குறித்த அறிக்கையை உடனுக்குடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.32857/PWII/2009-2, நாள் 17.6.2009–ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை.5
தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதாரத்துறை), திருச்சி மண்டலம், திருச்சி–20.
தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை–5.
நகல்கள்
பொதுப்பணித்துறை, ஐ ஸ்பெஷல் பிரிவு, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–9.
மாநிலக் கணக்காயர், சென்னை 18 /35.
நிதித் (பொ.ப.II/வ.செ.II)துறை, சென்னை–9.
அனைத்துப் பாசனப் பிரிவுகள், சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்